நாள்- 08.06.2023

Case No. OS.5/2013 (PW1 Cross)

PW.1 - இராஜேஸ்வரி – 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

5 முதல் 8 பிரதிவாதிகளோடு சேர்ந்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். எனக்கும், அவர்களுக்கும் சண்டை வந்துவிட்டதால் நான் விலகிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இதுவரை சொத்து பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. ஏற்கனவே பாகப்பிரிவினை ஆனது என்று நான் சொல்லியிருந்தால் தவறாகும். என் கணவர் ஆனந்தன், ஜெயபால் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். என் கணவர் உயிரோடு இருக்கும்போது பாகப்பிரிவினை நடந்தது ஆனால் எந்த ஆண்டு நடந்தது என்று எனக்கு தெரியாது. என் கணவர் இறந்த சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் 2010 ல் இறந்துவிட்டார். என் கணவர் இறப்பதற்கு முன்பே ஆனந்தன் இறந்துவிட்டார். ஜெயபால் மட்டும்தான் உயிரோடு இருக்கிறார். திருமணமாகி என் கணவருடன் 15 வருடம் வரை இருந்தேன். எந்த வருடத்தில் பாகபிரிவினை நடந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. என் கணவர் உயிரோடு இருக்கும்போது பாகப்பிரிவினை நடந்தது என்றும் தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கூட்டுப்பட்டா பக்கம் 30 ல் 2 முதல் 10 நபர்களுக்கு கூட்டுபட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். கூட்டுப்பட்டா பி.வா.சா.ஆ.1 ஆகும். பஞ்சாயத்து பேசி வாய்மொழி மூலமாக தலா 1 ஏக்கர் 30 சென்ட் என பிரித்து பயிர் வைத்துக்கொண்டோம். சுமார் 13 வருடத்திற்கு முன்பு பஞ்சாயத்து முன்னிலையில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது. அதன்பிறகு தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். என் மாமனார் ஐய்யாசாமி பெயரில்தான் பட்டா இதுவரையிலும் உள்ளது. என் மாமனார் ஐய்யாசாமி இறந்துவிட்டது சம்மந்தமாக இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டா என்று எனக்கு தெரியாது. என் மாமியார் வழக்கு தாக்கல் செய்தபிறகு இறந்துவிட்டார். பிரதிவாதி 4 என் மாமியார் சகுந்தலா வழக்கு தாக்கல் செய்தபிறகு இறந்துவிட்டார், ஐய்யாசாமியின் மகள்கள் பிரதிவாதி 1 மற்றும் 2 என்னுடைய நாத்தனார். ஐய்யாசாமிக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது. ஐய்யாசாமியின் பெயரில் சொத்து பற்றிய ஆவணங்கள் நான் வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1975 ல் ஐய்யாசாமி பெயரிலுள்ள ஆவணங்களை தாக்கல் செய்தால்தான் உண்மை விவரம் தெரியவரும் என்று சொன்னால் வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். என் கணவர், தங்கைகள், மாமியார் , மணிமேகலை சொத்தை விற்றுவிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வெளியில் 2004 ல் விற்றுவிட்ட சொத்துக்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்கை நடத்தும் பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கலா, வசந்தி ஆகியோர்கள் சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். மணிமேகலை, சகுந்தலா, அருள் ஆகியோர்கள் சொத்தை விற்றுவிட்டார்கள் என்று எதிர்வழக்குரையில் கண்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. என் கணவர், ஜெயபால் ஆகியோர்கள் விவசாயகுடும்பம் என்றால் சரிதான். எத்தனை பம்ப்செண்ட் உள்ளது என்று என் கணவருக்குதான் தெரியும். 2 மின்சார இணைப்பு உள்ளது. கிணறில் யார் யாருக்கு பாகம் உள்ளது என்று எனக்கு தெரியாது.

சொத்தில் என்ன வருமானம் உள்ளது என்று எனக்கு தெரியாது. குடும்பத்தில் கடன் வாங்கும்நிலையில் இருந்ததா என்றால் இருந்தது. குடும்பத்தில் ரூ.30,000/- கடன் இருந்தது. நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் குடும்ப செலவுக்கு சரியாகிவிடும். அதிகபடியான வருமானம் கிடைக்காது. குடும்ப சொத்திலிருந்து வருமானம் பெற்று ஜெயபால், ஆனந்தன் , என் கணவர் ஆகியோர்கள் பெயரில் சொத்து வாங்குவதற்கு வருமானம் கிடையாது என்றால் பாகப்பிரிவினைக்கு பிறகு என் கணவர் அருள் அவர் பெயரில் சொத்து வாங்கினார். என் கணவர் அருள் இளநீர், கீரை வியாபாரம் மற்றும் செங்கல் சூலைவேலைக்கு கூலிக்கு செல்வார். நான் தாக்கல் செய்துள்ள தாவா மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் கணவர் அருள் இளநீர், கீரை வியாபாரம் மற்றும் செங்கல் சூலைவேலைக்கு கூலிக்கு செல்வார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். குடும்பத்தில் சொத்தின் மூலமாக எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று தாவா மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் என் கணவர் என்னிடம் அந்த விவரத்தை சொல்லவில்லை அதனால் அதை நான் சொல்லவில்லை. குடும்பத்தில் நடக்கும் வரவு செலவு கணக்குகளை பற்றி என் கணவருக்கு சொன்னதில்லை. சொத்து எந்த வருடத்தில் என் கணவர் வாங்கினார் என்று ஆவணங்களை நான் என் வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை. என் கணவர் கங்காதர முதலியாரிடம் சொத்து வாங்கினார். அந்த பத்திரத்தை ஆஜர் செய்தால் எந்த வருடத்தில் பத்திரம் வாங்கினார் என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். குடும்ப வருமானத்திலிருந்து வாங்கிய சொத்து என்று சொன்னால் அது தவறு. என் கணவர் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்துகள். என்னுடைய கணவர் தங்கைகளுக்கு வீடு கட்டுவதற்கு பணம் கொடுத்தார் அதற்கான ஆவணங்கள் மற்றும் சீட்டு கட்டி என் கணவர் அவருடைய தங்கைகளுக்கு பணம் கொடுத்தார். என் கணவரின் அண்ணன் ஆனந்தன் தற்போது உயிரோடு இல்லை. என் கணவரின் தம்பி ஜெயபால் சிறிய வயது. என் கணவர்தான் அவரின் தங்கைகளை பராமரித்து வந்தார். என் மாமியார் பிரதிவாதி 4 சகுந்தலா அவருக்கு சொத்தில் பாகம் இல்லை. அவர் உயிரோடு இருக்கும்போது அது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கவில்லை. என் கணவர் செலவு செய்ததற்கான ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)